சார்பு நீதிமன்றம், சத்தியமங்கலம்

O.S. No.86/2022

2026–ம் ஆண்டு ஜூன் மாதம் 15–ஆம் நாள் வா.சா.2 சாட்சி திரு.பசுவண்ணா என் முன் சாட்சியாக விசாரிக்கப்படுபவர். 1969ம் ஆண்டு 24வது சட்டப்பிரிவு 4(1) ஏற்பாட்டின்படி உயர்திரு.கே.எஸ்.ஷபீனா, எம்.எல்., சார்பு நீதிபதி, சத்தியமங்கலம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : திரு.பசுவண்ணா | தொழில் | : |
| த/பெ | : சித்தப்பன் | கிராமம் | : குத்தியாளத்தூர் |
| வயது | : | தாலுக்கா | : சத்தியமங்கலம் |

வா.சா.2 : முதல் விசாரணை:

நான் இவ்வழக்கில் சாட்சி ஆவேன். வாதி தரப்பில் சாட்சியமாக விசாரணை செய்ய பிரமாணவாக்குமூல பத்திரம் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி பிரமாணப்பத்திரிக்கையில் கண்டுள்ள சங்கதிகளை அறிவேன். எனது நிரூபண வாக்குமூலத்தை முதல் விசாரணையாக ஏற்ககோருகிறேன். அதிலுள்ள கைரேகை என்னுடையது தான்.

ஆவணங்கள் குறியீடு இல்லை.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் என்னால் அழைக்கப்பட்டு சாட்சியிடம் படித்து விளக்கமளித்து, அவர் சரியானவை என்று ஒப்புக் கொண்டு என் முன்பாக கையொப்பம் செய்தார்.

சார்பு நீதிபதி,
சத்தியமங்கலம்.